**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**MCOP.No.126/2022 P.W.2**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | |
|---|---|
| பெயர் | சரவணன் |
| த/பெ. | குளூதையப்பன் |
| வயது | 51 |
| வசிப்பிடம் | எண்.38, குசேல தெரு, பரமசிவம் நகர், திருக்கழுக்குன்றம் |
| தொழில் | ஓட்டுனர் |

**முதல் விசாரணை** 08.04.2026

நான் இந்த வழக்கில் மூன்றாம் தரப்பினர். இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது ஆதார் அட்டை தாக்கல் செய்கிறேன். அது ம.சா.ஆ.17.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் விபத்தை நேரில் பார்த்தேன். விபத்து சமயத்தில் நான் பெட்ரோல் பங்கில் இருந்து வெளியே வந்துக்கொண்டிருந்தேன். 04.12.2022 அன்று விபத்து நடந்தது. விபத்து ஏற்படுத்திய வண்டியின் பதிவெண் ஞாபகமில்லை. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் மனுதாரர்கள் எனக்கு நன்கு தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்து நடந்தவுடன் மனுதாரர்களுக்கு நான் போன் மூலம் தகவல் சொன்னேனா என்றால் போன் செய்யவில்லை, அவர்கள் வீட்டிற்கு சென்று சொன்னோம். போலீசார் என்னை விசாரித்தார்கள். குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. எனக்கு மனுதாரர்களை நன்கு தெரியும் என்றும், அதனால் தான் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து குறித்து நான் புகார் எதுவும் அளிக்கவில்லை என்றும், விபத்து குறித்து நான் கையொப்பம் எதுவும் போடவில்லை என்றும் சொன்னால் சரிதான். விஜயசாரதி எங்கு வேலை செய்கிறார் என்றால் கல்பாக்கத்தில் பவர் கார்பரேஷனில் வேலை செய்கிறார்.

**மறு விசாரணை**

இல்லை